**சூரியவெவ பிரதேச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜூன் 17 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜூன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து சூரியவெவ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2017 ஆண்டிற்கான நாட்குறிப்பு இலக்கம் 06 இன் மூலம் திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் மேற்கொண்டிருந்த ரூபா 589,343 தொகைக்கான தொங்கல் கணக்கு மீதியை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேவையான சீராக்கல் மேற்கொண்டு கணக்குகளை சரி செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் இனங்காண்பதற்கு முயற்சி எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான ஆதனங்களை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 82,260 தொகை இனை கணக்கீடு செய்திருக்கவில்லை. | ஆதனங்களை அபிவிருத்தி செய்யும் செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

(ஆ) **கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 403,818,931 தொகைக்கான 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் சமர்ப்பித்திருக்க வில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதி களை உறுதிப் படுத்தும் சான்றுகளை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 17 காணிகளில் 07 இன் உரிமை பிரதேச செயலாளருக்கு மற்றும் மகாவலி அதிகார சபைக்கு சொந்தமானதாக காணப்பட்ட அட்டவணைகள் பதிலுடன் அனுப்பப்படும் எனவும் மற்றும் அங்கீகாரம் பெற்ற கடிதம் நிர்மாண வேலை பதிவேட்டில் பதிவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 193 | பாதீட்டுடன் வரவு மற்றும் செலவு விடயங்களுக்கான மிகைகள் மற்றும் பற்றாக் குறைகளுக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது கணக்குகளுடன் சமர்ப்பிப்பேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச் குடியசரின் நிதிப் பிரமாணம் 571(3) | காலவதியான ரூபா 52,065 இற்கான வைப்புக் களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | நிதிப் பிரமாணங் களின் படி செயற்பட வேண்டும். | சபையின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) உள்ளூராட்சி ஆணையாளரின் (தென்) 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/ பபாகொ/2010/01 இலங்கங் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 04 | சபைக்கு சொந்தமான 11 கடையறைகளில் இருந்து ஒரே முறையில் பெறும் பணம் ரூபா 412,592 தொகை அறவிடப்பட்டி ருக்காததுடன் 2011 ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட நிலுவை மீதி ரூபா 292,592 தொகை ஆகும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | நிலுவைத் தொகையில் ரூபா 270,992 தொகை அறவிட முடியாமையால் அதனை பதிவழிப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவித்ததுடன் மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,767,505 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,762,304 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,053,000 | 1,014,470 | 992,150 | 22,320 | 831,000 | 911,710 | 914,460 | 15,350 |
| வாடகை | 21,931,200 | 20,624,811 | 20,144,852 | 1,688,640 | 19,323,100 | 17,077,595 | 17,008,480 | 981,065 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,251,000 | 1,589,404 | 1,485,104 | 16,500 | 1,229,100 | 1,283,599 | 1,309,049 | 1,750 |
| ஏனைய வரு மானங்கள் | 7,957,000 | 5,896,693 | 2,850,847 | 4,284,578 | 2,037,000 | 6,727,844 | 4,531,201 | 7,873,297 |
| மொத்தம் | 31,139,300 | 29,125,378 | 25,472,953 | 6,012,038 | 23,420,200 | 26,000,748 | 23,763,190 | 8,871,462 |

#### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 ஆம் ஆண்டின் போது நிருவப்பட்ட சூரிவெவ பிரதேச சபை 2017 ஆம் ஆண்டில் 02 பிரதேசங்கள் முன்னேற்றப்பட்ட பிரதேசங்களாக இனங்கண்டிருந்த போதிலும் பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1) படி வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முன்னேற்றப்பட்ட பிரதேசங்களில் வீதவரி பெறுமதி மதிப்பீடு செய்து அறவிடப்பட வேண்டும். | பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் இது வரை பெறுமதி மதிப்பீடு அலுவல்கள் மேற்கொள்ளப் படாமையால் வீதவரி அறவீடு செய்ய முடியாமல் உள்ளது என அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய வியாபார வரி ரூபா 22,320 தொகை அறவீடு செய்வதற்கு பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(1) இன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைத் தொகையில் 2020 ஆண்டு மார்ச் மாதம் ரூபா 360 தொகை அறவிடப்பட்டதுடன் மீதித் தொகைக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

**2.2.3 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 34 கடையறைகளில் இருந்து பெற வேண்டிய கடை வாடகை ரூபா 911,825 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் நிலுவைக் காலவீச்சு ஒரு மாதம் முதல் 86 மாதங்கள் வரை இடைப்பட்டதாகும். | நிலுவைக் கடையறை வாடகை வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைத் தொகையில் ரூபா 45,000 அறவிடப்பட்டதுடன், ரூபா 552,910 தொகைக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும் ரூபா 228,550 தொகையை பதிவழிப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப் பட்டுள்ளதுடன் மற்றும் மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சூரியவெவ வாராந்த சந்தை மற்றும் மொத்தச் சந்தை தொடர்பாக பெற வேண்டிய ரூபா 417,849 தொகை மற்றும் சூரியவெவ வாராந்த சந்தை வாகனத் தரிப்பிடம் தொடர்பாக முன்னைய ஆண்டிற்கான பெற வேண்டிய ரூபா 23,415 இற்கான வாடகை தவணைப் பணத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வாடகை வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைத் தொகையில் ரூபா 417,849 தொகையினை பதிவழிப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப் பட்டுள்ளதுடன் மற்றும் மீதியான ரூபா 23,415 தொகை அறவீடு செய்வதற்கு இணக்க சபைக்கு அனுப்பியுள்ளேளன். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய அறிவித்தல் பலகைக் கட்டணம் ரூபா 87,800 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை அறிவித்தல் பலகைக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவதிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 20,800 அறவிடப்பட்டதுடன் மீதியான ரூபா 67,000 தொகை யினை அறவீடு செய்வதற்காக வழக்குத் தாக்கல் செய்யப் பட்டதென அறிவிக்கின்றேன். |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 3,799,091 தொகை மற்றும் ரூபா 90,496 தொகை காணப்பட்டது. பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண மீதி ரூபா 745,829 தொகை முன்னைய ஆண்டிற்கானதாகும். | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத் தொகையில் ரூபா 1,120,000 அறவிடப்பட்ட துடன், நிலுவை முத்திரைக் கட்டணம் முற்றாக அறவிடப் பட்டதென அறிவிக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 126 இன் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் ஆக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் 28 விடயங்களுக்காக மாத்திரம் துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்தன. | துணை விதிகளை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளுராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதி வர்த்தமானி யில் பிரசுரிக்கப் பட்டிருந்த அங்கீகரிக்கப்பட்ட துணை விதி 29 விடயங்களை 2012 ஆண்டின் போது தழுவியதுடன் தென் மாகாண விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் ஆக்கப்பட்ட 29 விடயங்களு க்கான துணை விதிகளில் 27 உம் 2017 ஆம் ஆண்டின் போது தழுவப்பட்டதென மற்றும் தற்போது 56 விடயங்கள் தழுவியுள்ளேன் என அறிவிக்கின்றேன். |

### (ஆ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பைகளை வகைப்படுத்தாமல் சபைக்கு உரித்தாக்கப்பட்ட காணி ஒன்றில் முறையற்ற விதமாக குவிக்கப் பட்டிருந்ததுடன் பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்க திட்டமிட்டிருந்த சேதனப் பசளை உற்பத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. மத்திய சுற்றாடல் அதிகார சபை மூலம் சுற்றாடல் பரிந்துரைகள் அடங்கிய 06 நிபந்தனைகள் வழங்கியிருந்த போதிலும் அதனையும் செயற்படுத்தி இருக்கவில்லை. | திண்மக் கழிவுப் பொருள் சரியாக முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். சுற்றாடல் பரிந்துரைகளின் அடங்கிய நிபந்தனைகளை செயற்படுத்த வேண்டும். | மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் பிலிசரு செயற்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்குவதென 2014 ஆண்டு முதல் அறிவுறுத்திய போதிலும் இது வரை கிடைக்காமையும், மகாவலி அதிகார சபையினால் வழங்கியிருந்த காணிக்கு அங்கீகாரம் அற்றவர்கள் நுழைந்துள்ள காரணத்தினால் மின்வேலியும் நிர்மாணிக்க முடியாமல் போனதுடன், எதிர்காலத்தில் இச் செயற் திட்டத்தை சபை நிதியம் மற்றும் வெளி உதவிகளின் மீது செயற்படுத்தப்படும் என அறிவிக்கின்றேன். |

### (இ) அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது பாதீட்டின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டிருந்த ரூபா 4,444,263 இற்கான 45 நிர்மாண வேலை செயற்திட்டங்களை செயற்படுத்தி இருக்காததுடன் பாதீட்டின் மூலம் நிதி ஒதுக்கி இருக்காத ரூபா 1,484,300 தொகைக்கான 16 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. | பாதீடு செய்யப்பட்ட செயற்திட்டங் களை ஆண்டின் போது செயற்படுத்த வேண்டும். | 2020 ஆண்டில் பாதீட்டில் அடங்கியுள்ள நிர்மாண வேலைகளை ஆண்டின் போதே பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (ஈ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரழின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அளவீடு செய்வதற்கான சுட்டிகள் இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அவ்வப் போது பரிசோதனை செய்ய வேண்டும். | 2020 ஆண்டிற்கான திட்டங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன என அறிவிக்கின்றேன். |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள் ஒன்றிற்காக கடந்த 05 வருடங்களுக்கான வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருடாந்தம் அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிமை உள்ளூராட்சி அமைச்சுக்கு சொந்தமாக இருந்ததால் வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது என அறிவிக்கின்றேன். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

### (அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ஆளணித் திட்டத்தில் அங்கீகரிக் கப்பட்டிருந்த 06 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மற்றும் 12 மிகைகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணி மிகைகளை முறைப்படுத்து வதற்கு மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 02 வெற்றிடங்கள் நிரப்பப் பட்டதுடன், மீதியான வெற்றிடங்களை நிரப்பித் தரும்படி உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தி உள்ளேன். |

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (ii) | 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலக்கங் கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஒட்டுமொத்த பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் மற்றும் மனிதவளத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். | 2020 ஆண்டு முதல் செயலாற்றல் உடன்படிக்கைகள் கையொப்பமிடப்படுகின்றது என அறிவிக்கின்றேன். |

**(ஆ) ஊழியர் கடன்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மூன்று உத்தியோத்தர்களுக்கு முன்னைய ஆண்டுகளின் போது வழங்கியிருந்த மற்றும் மிகையாக அறவிடப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 50,365 இற்கான ஊழியர் கடனை அறவீடு செய்வதற்கு/ தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊழியர்கடன் அறவீடு செய்வதற்கு/ தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஊழியர் கடன் தொகையில் ரூபா 9,464 தொகை அறவீடு செய்து தீர்த்ததுடன் மீதியாகிய ரூபா 42,673 தொகை எதிர்காலத்தில் அறவீடு செய்வேன் என அறிவிக்கின்றேன். |
| (ii) | இடமாற்றம் பெற்று வந்துள்ள உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து 32 கடன் தவணைகளுக் காக அறவிடப்பட்ட ரூபா 66,323 தொகை பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | ஊழியர்கடன் அறவிடப்பட்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | தென் மாகாண செயலாளரின் 2017 ஏப்ரல் 28 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பெற்ற அறிவுரையின் படி கடன் தவணைகளை அறவீடு செய்வதற்காக வலய கல்வி அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது என அறிவிக்கின்றேன். |

## 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையினால் முன்னைய மற்றும் மீளாய்வாண்டு வரை அங்கீகரிக்கப்பட்ட 168 கட்டிட வரைவுகளில் 04 இற்கு மாத்திரம் இணக்கச் சான்றிதழ் வழங்கப் பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபு களுக்காக இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கு ஊக்குவிக்க வேண்டும். | கட்டிடட நிர்மாண வேலைகளை பரிசோதனை செய்யும் படி பெறுமதி மதிப்பீட்டு உத்தியோகத்தர்களை அறிவுறுத்திய போதிலும், இணக்கச் சான்றுகள் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் காலநீடிப்புக்காக விண்ணப்பம் செய்வதற்காக ஆதன உரிமையாளர்களை அறிவுறுத்துவேன் என அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் தபப 01/2010/ பபாகொ/ மற்றும் 2010 திசெம்பர் 27 திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான சூரியவெவ பஸ் நிலையத்தில் உள்ள 09 கடைகளுக்கான கடை வாடகை பெறுமதி மதிப்பீடு, உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். | ஒன்பது கடைகளின் உரிமையை உரித்தாக்கி பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது என அறிவிக்கின்றேன். |
| (இ) | பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 142(5) இன் பிரகாரம் பெறுமதி மதிப்பீட்டு வாடகை அறவீடு செய்வதற்கு செயற்படாத காரணத்தினால் மீளாய்வாண்டின் பொது சபை இழந்துள்ள வருமானம் ரூபா 46,750 ஆகும். | சட்டத்தின் பிரகாரம் பெறுமதி மதிப்பீட்டு வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் கடை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஈ) | 1993 இன் ஜூன் 24 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த 1980 இன் 49 ஆம் இலக்கம் தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி பெற்றுக்கொள்ள வேண்டிய சுற்றாடல் தாக்க பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை இன்றிய 27 வர்த்தக நிலையங்களுக்காக வர்த்தக அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டிற்காக சுற்றாடல் தாக்கப் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை பெற்றிருந்த 32 வியாபார நிலையங்களுக்காக வர்த்தக அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதை ஊக்குவிப்பதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அந்த வர்த்தக நிலையங்கள் தொடர்பாக அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக ஊக்குவிப்பேன் என அறிவிக்கின்றேன். |
| (உ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நீர் நுகர்வோர் 75 பேரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த நீர்க் கட்டணம் ரூபா 75,110,705 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காத துடன் நீர்க் கட்டண பதிவேட்டில் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவை நீர்க் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு மற்றும் குறிப்பிட்ட பதிவேடுகளை சரியாக பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைத் தொகையில் ரூபா 12,720 தொகை அறவிடப்பட்டதுடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்களை ஆவணப்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையினால் அனுபவிக்கப்பட்டு வரும் 06 காணிகளை ஆவணப்படுத்தி இருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை ஆவணப்படுத்த வேண்டும். | இந்தக் காணிகள் பிரதேச செயலாளருக்கு மற்றும் மகாவலி அதிகார சபைக்கு உரியனவாகும், உரித்தாக்கித் தந்த பின்னர் கணக்கீடு செய்வேன் என அறிவிக்கின்றேன். |

### 3.5.2 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான ரூபா 21,079,260 தொகை பெறுமதியான 15 காணிகள் மற்றும் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் 22 விளையாட்டுத் திடல்கள், 32 மயானங்கள், 81 சனசமூக நிலையங்கள் மற்றும் ஏனைய பொது விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 36 காணிகளின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டு அனைத்து காணிகளினதும் அளவை நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு உரித்தாக்கு வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான ரூபா 1,125,000 தொகை பெறுமதியான 03 வாகனங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | டிரக்டர் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றின் பதிவு தொடர்பான விபரங்கள் காணப்படாமை மற்றும் கைடிரக்டர் கிராம அபிவிருத்தி அமைச்சுக்கு உரித்தானதுடன், எதிர்காலத்தில் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

### 3.5.3 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டின் போது ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்த கப் வண்டியை திருத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொருத்தமான விதத்தில் செயற்பட வேண்டும். | அப்புறப்படுத்துதல் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கின்றேன். |